بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்-அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 27 June 2014 (Tamil)**

## கானாவை சார்ந்த அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்களின் சிறப்பான பண்புகள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, அவர்களின் வாதத்திற்கு முன்னரும் அதற்குப் பிறகும் يَنۡصُرُكَ رِجَالٌ نُوۡحِیۡۤ اِلَیۡهِمۡ مِنَ السَّمَآءِ **(யன்ஸுருக ரிஜாலுன் நூஹீ இலைஹிம் மினஸ் ஸமாயி)** என்ற இறையறிவிப்பு பல முறை இறங்கியது.*(தஸ்கிரா பக்கம் 850 வெளியீடு 2009)* அதாவது எவர்களுடைய உள்ளங்களில் நாம் இறையறிவிப்பை இறக்குவோமோ அவர்கள் உமக்கு உதவி புரிவார்கள். அத்துடன் 1907 - ஆம் ஆண்டு, یَاۡتُوۡنَ مِنۡ کُلِّ فَجٍّ عَمِیۡقٍ **(யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்**-மிக நீண்ட தொலைவிலிருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள்) என்ற இறையறிவிப்பும் இறங்கியது.*(தஸ்கிரா பக்கம் 975)* இந்த இறையறிவிப்பு மிகவும் மகத்தான முறையில் பல்வேறு கோணங்களில், பல்வேறு வடிவங்களில் இப்போது வரை நிறைவேறிக் கொண்டே செல்கின்றது. பல்வேறு விதமான மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து அன்னாரின் வாழ்வில் அன்னாரிடம் வந்து கொண்டிருந்தனர். மேலும் அன்னாருக்குப் பிறகு அன்னாரின் மூலமாக தொடரும் கிலாஃபத் அமைப்பில் காலத்தின் கலீஃபாவிடம் வந்து கொண்டிருந்தனர்; வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் உதவியாளர்களாகவும் ஆகின்றனர். உதவியாளர்களாக மாற வேண்டும் என்பதன் பக்கம் அல்லாஹ் அவர்களின் உள்ளங்களை திருப்புவது மட்டுமின்றி, அவர்களிடம் உதவி செய்தல், தொண்டு செய்தல், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கொள்கையை முழுமைப்படுத்துவது தொடர்பான ஒரு துடிப்பும், ஈடுபாடும் உருவாகிவிடுகிறது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: **இப்போது நான், கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட, ஜமாஅத்திற்காக தன்னை மாய்த்துக் கொண்ட ஜனாப் அப்துல் வஹ்ஹாப் ஆதம் அவர்களைப் பற்றி கூறுவேன்.** அவர் ஆப்பிரிக்காவிலிருந்து அந்த காலத்தில் மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக ஜமாஅத்தின் மேலிடம் (ஆகிய ரப்வாவிற்கு) வந்தார். கிலாஃபத்திற்கு சுல்தனே நஸீர் எனும் உதவியாளராக ஆகுவதற்காக வந்தார். இனி இந்த வேலையை, தான் தனது முழு தகுதிகளுடன் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்ற உறுதி மனப்பான்மையுடன் வந்தார். ரப்வாவில் மக்கள் குடிபெயர்ந்து கொண்டிருந்த நேரத்தில் வந்தார். அப்போது ஆப்பிரிக்காவுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் பல மாதங்கள் ஆகும். இந்த நமது அன்பிற்குரிய பெரியவர், சகோதரர், கிலாஃபத்திற்காக உயிரைக் கொடுக்கும் படை வீரராகவும், காலத்தின் கலீஃபாவின் சைகையின்படி நடக்கின்றவராகவும், காலத்தின் கலீஃபாவிடமிருந்து வருகின்ற ஒவ்வொரு தீர்மானத்தையும் திறந்த மனதுடன் ஒப்புக்கொள்ளக் கூடியவராகவும், காலத்தின் கலீஃபாவின் சின்னச் சின்ன கட்டளையை - ஏன் - விருப்பத்தைக் கூட நிறைவேற்றுவதற்கு நிம்மதியிழந்தவராகவும் இருந்தார். **நான் இவருடன் கானாவின் 8 ஆண்டுகளுக்கும் அதிகமாக வேலை செய்திருக்கிறேன்.** அப்போதும் கிலாஃபத்துடன் உள்ள தொடர்பை நான் இப்போது கூறிய அதே போன்று கண்டேன். கிலாஃபத்திற்குப் பிறகு என்னுடனும் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், நன்றியுணர்வுடன் செயல்படுதல் ஆகியவற்றின் இந்த தகுதியில் அணுவின் முனையளவும் வித்தியாசம் ஏற்படவில்லை.

சில நாட்களுக்கு முன் அப்துல் வஹ்ஹாஹ் சாஹிப் அவர்கள் மரணமடந்தார்கள் என்பதை

நீங்கள் அறிவீர்கள். **இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.** இந்த மார்க்கத் தொண்டரின் மார்க்கத் தொண்டின் காலம் அரை நூற்றாண்டை விட அதிகமாக பரவிக் கிடக்கின்றது. அவருடைய தொண்டுகள், அவருடைய சிறப்புப் பண்புகள், அவருடைய நன்றியுணர்வுகள் ஆகியவை பற்றிய சம்பவங்களை சுருக்கமான இந்த நேரத்தில் எடுத்துரைக்க இயலாது. எனினும், சில விஷயங்களை நான் உங்களுக்கு முன் எடுத்துக் கூறுகிறேன். அதிலிருந்து அவருடைய வாழ்க்கையின் சில முக்கிய அம்சங்கள் பகிரங்கமாக வெளிப்படுகின்றன.

அவர்கள் 1952 - ஆம் ஆண்டு ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் மார்க்கக் கல்வி கற்பதற்காக அனுப்பப்பட்டார்கள். 1960 - ஆம் ஆண்டு அவர்கள் ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து **ஷாஹிது** பட்டம் பெற்றார்கள். பிறகு கானா திரும்பிச் சென்றார்கள். அங்கு அவர்கள் பல்வேறு இடங்களில் மண்டல கொள்கை பரப்புநராக நியமிக்கப்பட்டார்கள். 1969 - ஆம் ஆண்டு வரை முதல் மண்டலமாகிய **Brong Ahafo** (புரோங் ஆஹோஃபோ) - வில் தொண்டு செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. இதற்குப் பிறகு அவர்கள் கானாவிலுள்ள சாலட்போன் என்ற இடத்திலுள்ள ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனின் முதவராக ஆனார்கள். அதற்குப் பிறகு 1971 - ஆம் ஆண்டு **U.K** (யூ.கே) விலுள்ள இலண்டன் பஸ்ல் பள்ளிவாயிலில் துணை இமாமாக நியமிக்கப்பட்டார்கள். 1974 வரை இந்தப் பொறுப்பை அவர்கள் நிறைவேற்றினார்கள். **1975 - ஆம் ஆண்டு அவர்கள் கானாவின் அமீராகவும், பொறுப்பு கொள்கை பரப்புநராகவும் நியமிக்கப்பட்டார்கள். மேலும் மரணமடையும் வரை ஏறக்குறைய 39 ஆண்டுகள் இந்தப் பொறுப்பிலேயே இருந்து வந்தார்கள்.** இவர்கள் ரப்வாவில் இருந்தபோது கானாவின் தூதுவர் ஒரு சந்தர்ப்பத்தில் ரப்வா வந்தார். அப்போது இவர்கள் அந்தத் தூதுவரிடம், இந்த ரப்வா எவ்வாறு குடிபெயரும் இடமாக மாறியது; அது முதலில் எந்த அளவுக்கு பொட்டல் காடாக இருந்தது! எவ்வாறு மக்கள் இதற்காக தியாகங்களை செய்தார்கள்? ஆகிய அனைத்து விஷயங்களயும் எவ்வளவு அருமையாக எடுத்துக் கூறினார்கள் என்றால், அதைக் கேட்ட அந்த தூதுவர், ஒருவருக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்து - அவர் இறை இருப்பின் மீது நம்பிக்கை கொள்ளாதவராக இருந்து, ரப்வா எவ்வாறு உருவானது என்ற இந்த சம்பவங்களைக் கேட்டால் அவர் கண்டிப்பாக இறைவன் மீது ஈமான் கொண்டு விடுவார் எனக் கூறினார். ஆக, இவ்வாறு அப்துல் வஹ்ஹாப் சாஹிப் தப்லீகிற்கான எந்த வாய்ப்பையும் கைவிட்டதில்லை.

இன்னும் சில நற்பேறுகளும் அவருக்குக் கிடைத்தன. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் தான் **முதல் ஆப்பிரிக்க மேலிடத்து கொள்கை பரப்புநர்** ஆவார்கள். கானாவைச் சேர்ந்த **முதல் அமீரும் பொறுப்பு கொள்கை பரப்புநரும்** இவர்தான். ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் பிரதிநிதித்துவத்தில் **ரப்வாவின் உள்ளூர் அமீர்** ஆகும் நல்வாய்ப்பு கிடைத்த **முதல் ஆப்பிரிக்க அஹ்மதியும்** இவர்தான். **ஐரோப்பாவில் தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்த முதல் ஆப்பிரிக்க மேலிட கொள்கை பரப்புநர் இவர்தான். ஆப்பிரிக்கர்களிலேயே மார்க்கத் தீர்ப்பு வழங்கும் குழுவின் கண்ணியத்திற்குரிய உறுப்பினராகும் நல்வய்ப்பைப் பெற்றவரும் இவரே.** இவருக்கு மேலிடத்தின் பிரதிநிதித்துவத்தில் கனடா, ஜெர்மனி, பெனின், மாலீ, ஐவரீ கோஸ்டு, நைஜீரியா, பூர்கீனாஃபாஸோ, லைபீரியா, சிரால்யோன், ஜமைகா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நல்வாய்ப்பும் கிடைத்தது. இவருக்கு இஸ்லாம் மற்றும் மத, நிற வேறுபாடு மற்றும் இஸ்லாமும் கிறிஸ்தவமும் ஆகியவை பற்றி ஆய்வு செய்வதற்கான, கட்டுரை எழுதுவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இவர் தனது தாயாரின் பெயரில் ஒரு **Foundation** - ஐயும் திறந்தார். அது தேவையுடையோருக்கு உதவி செய்கின்றது. இவர் தலைமைப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் அல்லாஹ்வின் அருளினால் கானாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் முன்னேற்றமடைந்தது. அல்லாஹ்வின் அருளினால் முன்னரும் சில பள்ளிக் கூடங்கள் இருந்தன; இன்னும் சில பள்ளிக் கூடங்கள் திறந்தன. மேலும் அதில் அதிகமாக சிறப்புகள் உருவாயின. அங்கு (கானாவில்) 400 - க்கும் மேற்பட்ட பள்ளிக் கூடங்கள் உள்ளன. அது மட்டுமின்றி **Teacher Training College** (ஆசிரியர் பயிற்சிப் கல்லூரி), ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீன், ஜாமிஆ அஹ்மதிய்யா இன்டர் நேஷனல் ஆகியவை சிறப்பாக உள்ளன. அவ்வாறே கானாவில் 7 மிகப் பெரிய மருத்துவமனைகளும் 2 ஹோமியோபதி மருத்துவமனைகளும் இருக்கின்றன. அவை தொண்டு செய்து வருகின்றன. இவை மட்டுமின்றி பொதுமக்களின் துயர் துடைக்கும் பணிகளும் அங்கே நடக்கின்றன. மேலும் பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் ஜமாஅத்திற்கு அசாதாரணமான இடம் கிடைத்துள்ளது. மேலும் கானாவிலுள்ள இரண்டு பெரிய தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. அவற்றில் இவர் மிகவும் முயற்சி செய்து ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் படத்தை வைத்திருந்தார்கள். வருகின்றவர்களும் செல்கின்றவர்களும் அதனைப் பார்க்கின்றார்கள். அவற்றின் கீழே, எந்த மஸீஹ் வருவார் என எதிர்பார்க்கப்பட்டதோ அவர் வந்து விட்டார்; அவர் இவர்தான் என எழுதியிருந்தார். இவ்வாறு அவர் பகிரங்கமாக அங்கு தப்லீக் செய்தார்.

இவருக்கு கிடைத்த உலக கவுரவங்கள் எவை என்றால், கொரியாவில் **Inter Religious** மற்றும் அமைதிக்காக தன்னலமற்ற மகத்தான தொண்டு செய்ததற்காக அமெரிக்காவின் **International Fedetation for World Peace** சார்பாக **Ambassador for Peace** என்ற கண்ணியம் கிடைத்தது. அவ்வாறே கானா அரசாங்கம் சார்பாக கானா அமீர் சாஹிப் அவர்களுக்கு அவர்களின் கல்வி, உடற் பயிற்சி மற்றும் விவசாயம், நாட்டின் அமைதி, உறுதிப்பாட்டிற்காக செய்த தொண்டுகளைப் பாராட்டி ஒரு முக்கிய தேசிய கண்ணிய விருதாகிய **Companion of the Order of the Volta** என்பதை வழங்கியது.

பிறகு 10 நவம்பர் 2007 - ஆம் ஆண்டு அன்னாரின் தகுதியைப் பாராட்டி நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமாகிய **Cape Coast** என்ற பல்கலைக்கழகம் அவருக்கு **PhD** பட்டத்தை வழங்கியது. இதுதான் நல்ல எண்ணத்துடன் வாழ்க்கையை அர்ப்பணித்தலுக்கான அருள்கள்! **மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைக்கின்ற அதே வேளையில் அல்லாஹ் அவர்களுக்கு உலக கண்ணியங்களையும் வழங்கி விடுகின்றான்**. இவர் வாழ்வை அர்ப்பணிக்காமல் இருந்திருந்தால் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் என்பவர் யார் என்பது கூட யாருக்கும் தெரிந்திருக்காது. பிறகு இன்டர் நேஷனல் அளவில் அவருடைய பொறுப்புகள் கீழ் வருமாறு:

கானாவின் **Center for Democratic Development (CDD)** - ன் உறுப்பினராக இருந்தார். **Ghana Integrity** ன் **Vice Chairman** ஆக இருந்தார். **National Peace Council** - ன் உறுப்பினராக இருந்தார். மேலும் அங்குள்ள அரசியல் கட்சிகளை ஒன்று சேர்ந்து அமைதியுடன் ஆட்சி நடத்துவதில் பெரும் பங்காற்றினார். . **International President for Council of Religions** - ன் **Co-Founder** ஆக இருந்தார். அதில் பல்வேறு மார்க்கங்களின் பிரதிநிதித்துவம் இருந்தது. **National Reconciliation Commission** -ன் உறுப்பினராக இருந்தார்.

**கானாவின் துணை பிரதமர் அமிஸ்ஸா ஆர்தர் (Amissah Arthur) கூறுகிறார்:**

''அவர் எங்கள் சமுதாயத்தின் மகத்தான வழிகாட்டியாக விளங்கினார். இந்த மகத்தான வழிகாட்டியின் மரணத்திற்கு அவருடைய குடும்பத்தினர் மற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் துக்கத்தில் கானா அரசு சரிசமமாக கலந்து கொள்கின்றது. மவ்லவி அப்துல் வஹ்ஹாப் சாஹிப் நமது நாட்டில் அமைதியின் சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்த விஷயத்தில் நாம் எப்போதும் அவரை நினைவு கூறுவோம். அவ்வாறே **இவரும், கானாவில் இவர் தலைமை ஏற்றிருந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தும் கானாவில் கல்வியறிவை வளர்ப்பதில் செய்த முயற்சிகளை நாம் மறக்க முடியாது.** கல்வியறிவு படைத்தவராகவும், மார்க்க வழிகாட்டியாகவும் திகழ்ந்த அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்களை துக்கமான மனதுடன் வழியனுப்பியவாறு, எந்த அமைதியை அவர் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்தாரோ அது நமது நாட்டில் நிலைபெறட்டுமாக என நாம் துஆ செய்கின்றோம்.''

அவ்வாறே கானாவின் முன்னாள் தலைவர் ஜான் அஜீகம் குஃபோர் **(John Agyekum Kufuor)** கூறுகையில், அவர் ஒரு மிகப் பெரிய மார்க்க, சமுதாய வழிகாட்டியாக இருந்தார் எனக் குறிப்பிட்டார்.

பிறகு பாராளுமன்ற உறுப்பினரும் மாநில அமைச்சருமாகிய டாக்டர் முஸ்தஃபா அஹ்மது இவ்வாறு கூறினார்:

''கானா தனது பெருமைக்குரிய ஒரு மகனை இழந்து விட்டது - இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். (இவர் முஸ்லிம் ஆவார்). மேலும் அமைதியை நிலைநாட்ட இவர் செய்த முயற்சிகளிலிருந்து சமுதாயம் தொடர்ந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கும். எங்களின் முன்னேற்றத்திற்காகவும், வெற்றிக்காவும் செய்த அளப்பரிய தொண்டின் காரணமாக **நாங்கள் உங்களை எப்போதும் நினைவிற் கொள்வோம். அல்லாஹ் உங்களுக்கு ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் இடமளிப்பானாக.''**

கத்தோலிக் ஆர்ச் பிஷப் ஆஃப் அக்ரா **(Catholic Arch Bishap of Accra)** வாக இருக்கின்ற சார்லஸ் ஜீ. பால்மெர் பக்ல் **(Charles G. Palmer Buckle)** என்பவர் கூறுகிறார்:

''மனித குலத்திற்கு சேவை செய்வதில் களைப்பில்லாமல் செயல்படுபவராக இருந்தார். அமைதியின் தூதுவராக இருந்து இறைவனின் அன்பை விநியோகம் செய்து வந்தார். எந்த உயர்ந்த கொள்கைகளில் அவர் நிலைபெற்றிருந்தாரோ, எவற்றிக்காக அவர் வேலை செய்தாரோ அவற்றை என்னென்றும் உயிருடன் வைக்க வேண்டும்.''

பிறகு மேதோடிஸ்ட் (**Methodist**) - ன் தலைமை பெஷப் ரெவரன்டும், நேஷனல் பீஸ் கான்ஸ்ஃபிரன்ஸின் சேர்மேன் (**National Peace Conference Chairman**) - ம் ஆகிய பேராசிரியர் இம்மானுவேல் அசான்டே (**Most Rev. Prof. Emmanuel Asante**) என்பவர் எழுதுகின்றார்:

அமைதியை விரும்பக் கூடிய, நாட்டுப் பற்றுள்ள, ஒற்றுமைக்கு முயற்சித்த ஒருவர் திடீரென்று இறைவன் பக்கம் சென்று விட்டார். அமைதியை நிலைநாட்டுவதற்காக அவர் மேற்கொண்ட கொள்கைகளை நாட்டின் அமைதி மாநாடு எப்போதும் நிலைநாட்டி வரும்.

அவ்வாறே வெளியுறவுத் துறை அமைச்சரின் பிரதிநிதி ஹாஜி முஹம்மது காடூ சாஹிப். இவர் கானாவின் கவர்னிங் கவுன்ஸில் மற்றும் கானாவில்அமைதிக்கான மார்க்கங்களின் கவுன்ஸிலின் சேர்மேன் ஆவார். இவர் கூறுகிறார்:

நாம் கானாவின் முஸ்லிம் சமுதாயத்தின் மிகப் பெரிய ஒரு தூணை இழந்து நிற்கிறோம். அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்கள் பல்வேறு மார்க்கங்களுக்கு மத்தியில் தொடர்புகளின் பாலத்தை அமைத்தார்கள். அவர்கள் மிகவும் மகத்தான ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய வழிகாட்டியாக இருந்தார்கள். அவர்கள் தமது வாழ்வின் பெரும் பகுதியை மனித சேவைக்காக செலவிட்டார்கள். மேலும் உறவுகளை மேம்படுத்தினார்கள்.

அவருடைய மகன் ஹஸன் வஹ்ஹாப் சாஹிப் கூறுகிறார்:

தந்தை அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உண்மையான நன்றியுள்ளவராக இருந்தார். எல்லா விஷயத்திலும் காலத்தின் கலீஃபாவிடம் கண்டிப்பாக வழிகாட்டுதலைப் பெற்று வந்தார்கள். சில நேரத்தில் சின்னச் சின்ன விஷயங்களையும் வழிகாட்டுதலுக்காக கலீஃபாவுக்கு எழுதி வந்தார்கள். உதாரணமாக, தமது மரனத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நோயின் காரணமாக அதிகமாக பலவீனமடைந்து விட்டார்கள். மருத்துவமனைக்கு செல்லுமாறு மருத்துவர் கூறினார். அப்போது **முதலில் கலீஃபா அவர்களுக்கு எழுதி அனுமதி வாங்கிக் கொள்ளுங்கள்; பிறகு செல்வேன் என மருத்துவருக்கு பதில் கூறினார்கள்.**

பஷாரத் பஷீர் சாஹிபின் மனைவி எழுதுகின்றார்:

அப்துல் வஹ்ஹாப் மார்க்கக் கல்வியை நிறைவு செய்ததும் அல்லாஹ்வின் அருளால் வெற்றிகரமான முபல்லிகாக மாறினார்கள். அவர்களின் இயல்பில் ஆரம்பத்திலிருந்தே பணிவு காணப்பட்டது. 1954 - ஆம் ஆண்டு எனது திருமணம் ஆனபோது அப்துல் வஹ்ஹாப் சாஹிப் எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம், மவ்லானா சாஹிபின் அதாவது பஷாரத் பஷீர் சாஹிபின் ஷூவைக் கொடுங்கள்; நான் பாலிஷ் செய்ய வேண்டும் என்றார்கள். முபல்லிகாக மாறப் போகிற பையனிடம் இந்த சேவையை வாங்குவதா? என நான் பதற்றமடைந்தேன். ஆனால் அவர் தன்னை ரப்வாவுக்கு அழைத்து என்ன பேருபகாரத்தை தன் மீது செய்திருக்கிறாரோ அதற்கு ஏதாவதொரு வகையில் ஈடு செய்ய வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். மற்றபடி, ஆசிரியர் என்ற வகையிலும் அவரைப் பற்றிய கண்ணியம் மனதில் இருந்தது. அவ்வாறே பஷாரத் பஷீர் சாஹிபின் மரணத்தின்போது ஒரு பெரிய கட்டுரை எழுதினார். அது பற்றி அவரிடம் தெரிவித்தபோது அவர் மகிழ்ச்சியடைந்தார்.

பூர்கீனா பாஸோவில் அஹ்மதிய்யா ஜமாஅத் இவர் மூலமாகவே நிலைநாட்டப்பட்டது. கிலாஃபத் ஜூப்ளியின்போது சைக்கிள் ஓட்டம் நடைபெற்றபோது இவர், அவர்களிடம் டம்பாலே என்ற இடத்தில் நானே வந்து வரவேற்பேன் என தூது அனுப்பினார். மிகவும் பணியில் இருந்தபோதும் இவர் 2, 3 மைல் தூரம் கடந்து சென்று அங்கு அவர்களை வரவேற்பதற்காக சந்தித்தார்.

ஒரு ரஷ்ய நண்பர் கானாத் பேக் என்பவர் கூறுகிறார்:

2008 - ஆம் ஆண்டு கானா ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதறகான வாய்ப்பு கிடைத்தது. எனக்கு கானா அமீர் சாஹிப் சார்பாக அவருடைய வீட்டில் தங்குவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் தமது மரபு வழியிலான ஆடையிலேயே என்னை வரவேற்றார். கட்டித் தழுவினார். எனது 5 நாள் பயணத்தின் களைப்பு முற்றிலும் நீங்கி விடும் அளவுக்கு அவர் என்னை

சந்தித்தார். அவருடைய நிழற்படத்தைப் பார்க்கும்போது இப்போதும் நான் அவருடைய கைகளின் வெப்பத்தை உணர்கிறேன் எனக் கூறுகிறார்.

மலக் முஸஃப்பர் சாஹிப் கூறுகிறார்:

அரசியலில் இவருக்கு இருந்த செல்வாக்கு பற்றி ஒரு சம்பவத்தின் மூலமாக தெரிய வந்தது. நான் அகாரா என்ற நகரிலிருந்து டீமாதோ என்ற நகரை நோக்கி சென்று கொண்டிருந்தபோது வழியில் பத்திரிகை விற்பனையாகிக் கொண்டிருந்தது. அதில் முதல் பக்கத்தில் அப்துல் வஹ்ஹாப் சாஹிபின் நிழற்படம் தென்பட்டது. நான் உள்ளூர் கொள்கை பரப்புநரிடம் கேட்டபோது, அவர், சில வாரங்களுக்கு முன்பு கானாவில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. தற்போதைய கட்சியும் எதிர் கட்சியும் கொஞ்ச வாக்கு வித்தியாசத்தில் தேர்தலில் வெற்றி பெற்றனர். அதை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது மிகவும் பதற்றமும், அமைதியின்மையும் ஏற்படுவதற்கான அபாயம் இருந்தது. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் இரண்டு கட்சியினரையும் சந்தித்து அமைதியான ஆட்சி நடத்துவதற்கான முழு முயற்சியை மேற்கொண்டார்கள். சமுதாயம் அதை பாராட்டுகிறது. இந்த செய்தி அது பற்றியதுதான் எனக் கூறினார்.

ஹுஸூர் கூறுகிறார்கள்: நான் கானாவில் இருந்தபோது இவர் என்னிடம் மிகுந்த வேதனையுடன், சில கொள்கை பரப்புநர்கள் மிகவும் அதிகமாக வேலை செய்கின்றார்கள்; மிகவும் உழைக்கின்றார்கள். ஆனால் சிலர் முற்றிலும் வேலை செய்வதில்லை. இதை விட அதிகமாக வேலை நடைபெறாது எனக் கூறி விடுகிறார்கள். ஆனால் தப்லீகிற்காக புத்தம் புதிய வழிகள் திறக்க வேண்டும். நாம் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

அவர்களின் இந்தக் கூற்று நூற்றுக்கு நூறு உண்மையாகும். சிலர், என்ன வழிமுறை நடக்கிறதோ அவ்வளவுதான். அதன்படியே நடங்கள். புத்தம் புதிய வழிகளை திறக்க வேண்டாம் எனக் கருதுகின்றனர். எப்படி இருந்தாலும் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்களிடம் எல்லா இடத்திலும் அஹ்மதிய்யத்திற்கான தூதுச் செய்தி சென்றடைய வேண்டும்; சரியான இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைய வேண்டும் என்ற முயற்சி இருந்தது. அதற்காக அவரும் முயற்சி செய்து வந்தார்கள்.

இவர் மிகவும் அரசாங்க மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார். நாட்டின் பிரதமர் அங்கு தமது ஸ்டேட் ஹவுஸில் அவரது ஜனாஸாவை வரவழைத்து அரசு மரியாதையுடன் அங்கேயே தொழுவதற்கான ஏற்பாடு செய்தார். ஜனாஸாவை எடுத்துச் செல்வதற்காக அரசாங்கம் சார்பாக காவல் துறை, இராணுவம் மற்றும் பேரா மிலிடரி ஃபோர்ஸ் வாகனங்கள் முழுமையான கண்ணியமளித்தன. மேலும் ஸ்டேட் ஹவுஸில் பல்வேறு அமைசர்கள் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் இவரைப் பற்றி தமது கருத்துக்களை தெரிவித்தனர். அங்கு **Speacker's of Parliament**, பல்வேறு மார்க்கத் தலைவர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரும் அவரைப் பற்றி பாராட்டிப் பேசினர். மேலும் கானாவின் ஜாமிஆ அஹதிய்யாவின் முதல்வரும் நமது கொள்கை பரப்புநருமாகிய ஃபரீது சாஹிப் அவர்கள் அங்கு, **வாழ்வு மரணம் பற்றிய இஸ்லாத்தின் தத்துவம் மற்றும் கோட்பாடு பற்றி திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்கூற்றுகள் ஆகியவற்றின் ஒளியில் பேசினார்கள்.**

எப்படி இருந்தபோதிலும், அல்லாஹ்வின் அருளினால் மிக முழுமையான கண்ணியத்துடன் அவர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டார். கானாவிலுள்ள வஸிய்யத் செய்தவர்களின் அடக்கஸ்தலத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். மீடியாவிலும் கணிசமான அளவுக்கு கவரேஜ் செய்யப்பட்டது. கானா தொலைக்காட்சி போதுமான அளவுக்கு கவரேஜ் செய்தது. முழு உலகிலும் நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டது. இவருடைய உறவினர்களில் அவருடைய மனைவி மர்யம் வஹ்ஹாப் சாஹிபா மற்றும் 4 மகன்கள், 3 மகள்கள் இருக்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைத்தருள்வானாக. இவர் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் வைத்திருந்த, தனது மனைவி மக்களுக்காக விரும்பியிருந்த அதே உறுதியான தொடர்பை இவர்களும் வைப்பார்களாக. அல்லாஹ் இவர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவனாக. அல்லாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிபின் அந்தஸ்துகளை உயர்த்துவனாக. மேலும் தனது அன்பிற்குரியவர்களின் நெருக்கத்தில் இவருக்கு இடமளிப்பானாக.

(ஜுமுஆ) தொழுகைக்குப் பிறகு அவருடைய ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன் - இன்ஷா அல்லாஹ்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***